have to be taken into consideration. That is why the Government have reserved powers to themselves to appoint the Publicity Officers in whom they have got confidence.

SRI V. K. RAMASWAMY MUDALIAR: Sir, the Hon. Minister has said that there are some other posts which are not brought under the purview of the Public Service Commission. May I know why those posts also are not included in the answer laid on the table of the House?

THE HON. SRI C. SUBRAMANIAM: I would request the hon. Member to read the main question.

MR. SPEAKER: The question is clear. The hon Member (Sri M. Jagannathan) wanted information only in respect of four categories.

Permission to teachers to sit for S.S.L.C. Examination

MR. SPEAKER: The hon. Member (Sri T. Veluchami) is not in his seat. The question and the answer will be printed in the official proceedings.

* 297 *Q.*—SRI T. VELUCHAMI: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா ?

(அ) ஹையர் கிரேடு ஆசிரியர்களும், மற்றும் பண்டிட், முன்ஷி போன்ற ஆசிரியர்களும் எஸ்.எஸ்.எல்.சி. பரீக்ஷைக்கு இதற்கு முன்பு அனுமதிக்கப்பட்டது போல், 1959 மார்ச் மாதம் வரும் பரீக்ஷையில் அனுமதிக்கப்படுவார்களா ?

(ஆ) அதற்குப் பின்னால் வரும் வருஷங்களிலும் அனுமதிக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

(இ) இல்லை என்றால், ஏன் ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) & (*b*) Yes, Sir.

(*c*) Does not arise.

Kovilpatti Government Hospital

* 298 *Q.*—SRI V. SUBBIAH: கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா ?

(அ) கோவில்பட்டி ஆஸ்பத்திரியை அரசாங்கம் எடுத்துக்கொண்ட பின் என்ன மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன ?

(ஆ) கோவில்பட்டி ஆஸ்பத்திரியில் ஆபரேஷன் தியேட்டர், மெட்டர்னிடி வார்டுகள், படுக்கைகள் விஸ்தரிக்க நோக்கம் உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) None so far, Sir.

(*b*) The matter is under consideration.

SRI V. SUBBIAH: கோவில்பட்டி அரசாங்க ஆஸ்பத்திரி தாலூகாவிலேயே ஐந்து லட்சம் ஜனத்தொகை உள்ள தலைநகரத்தில் உள்ளது. அதற்குப் பின்னால் எடுக்கப்பட்ட ஆஸ்பத்திரிகளான—நான்குனேரி, தென்காசி, சங்கரன்கோயில் முதலிய ஜனத்தொகை, வருமானம் இதைவிடக்

குறைவாகவுள்ள இடங்களில் இருக்கும் ஆஸ்பத்திரிகளில் அதிகமான அபி விருத்தி செய்திருந்த போதிலும் கோவில்பட்டி ஆஸ்பத்திரியில் எந்தவித மான வேலையும் செய்யாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இப்போது அங்கே 14 படுக்கைகள் இருக்கின்றன. அதற்குமேலே இரண்டு வார்டு—ஒவ்வொரு வார்டிலும் 20 படுக்கை வீதம் கட்டுவதற்கும், அப்பரேஷன் வார்டு கட்டுவதற்கும், டில ர் ரூம், எக்ஸ்ரே ப்ளாக் முதலியவை ஏற்படுத்துவதற்கும் டி. எம். ஓ. விடமிருந்து சிபார்சு எதிர்பார்க்கப்படுகிறது.

Workers' participation in management

* 299 *Q*.—**Sri V. K. KOTHANDARAMAN** (on behalf of Sri K. Sattanatha Karayalar) : Will the Hon. the Minister for Industries be pleased to state the result of the experiment on the scheme of workers' participation in management?

The Hon. Sri R. VENKATARAMAN : The scheme of worker participation in management was introduced in this State in Messrs. Simpson and Group Companies (Private Sector) and in Government Transport Central Workshop, Chromepet (Public Sector). The proposal to have a Joint Council of Management in the Madras State Transport Department had, however, to be dropped, owing to disagreement in regard to the constitution of the Council.

While the Joint Council of Management in respect of the Press Group of Messrs. Simpson Group of Companies is reported to be working satisfactorily, the Joint Council of Management for the engineering group has not been functioning since January 1958 owing to certain differences of opinion on procedural issues in conducting the meeting of the Joint Council of Management.

Sri M. KALYANASUNDARAM : க்ரோம்பேட் தொழிற்சாலையில் தொழிலாளர்கள் நிர்வாகிகள் சேர்ந்து கவுன்சில் ஏற்படுத்த முடியாது போன காரணம் என்ன ? எந்த விஷயங்களில் அபிப்பிராயபேதம் ஏற்பட்டது ?

The Hon. Sri R. VENKATARAMAN : ஆரம்ப காலத்தில் நிர்வாகஸ்தருடைய பிரதிநிதி சேர்மனாக ஆறு மாதம் இருக்கவேண்டும். பிறகு அனுபவத்தை ஒட்டி என்ன மாறுதல் செய்ய வேண்டுமென்பதைப் பரிசீலனை செய்கிறேன் என்று நான் சொல்லியும் கூட தொழிலாளர்கள் ஒத்துக்கொள்ளாததால் அந்தக் கவுன்சிலை நிறுவ முடியவில்லை.

Sri T. S. RAMASWAMY PILLAI : ப்ரைவேட் செக்டாரில் ஏன் இந்தக் கவுன்சில் சரியாக ஏற்படுத்தப்படவில்லை ?

The Hon. Sri R. VENKATARAMAN : தொழிலாளர்கள் நான் சொன்னதை ஒத்துக்கொள்ளாதது தான்.

Sri S. NAGARAJA MONIGAR : அநேக முக்கியமான தொழில்கள் நம் நாட்டில் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக வெளிநாட்டு உள்நாட்டு நிபுணர்களை எல்லாம் கலந்து ஆலோசித்து வருகிறோம். இப்படி இருக்க தொழிலாளர்களைச் சேர்த்துக்கொண்டு தொழில் அமைப்பது என்றால் சாத்தியமா ? அது ஒத்து வருமா ? எந்த அளவில் ஒத்துவரும் என்பதைத் தீர ஆலோசித்திருக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : தொழிலாளர்களுடைய ஒத்துழைப்பினால் தான் உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பது சர்க்காரின் அடிப்படையான கொள்கை.